# K/SARASWATHY CENTRAL COLLEGE – PUSSELLAWA

## இடர்க்கால விடுமுறைக்கான மாணவர் செயலட்டை – 2021

**தரம்:** 10 **பாடம்:** தமிழ்மொழியும் இலக்கியமும்

சுருக்கமான விடை தருக.

01) பின்வரும் தொடரை சந்திபிரித்து எழுதுக.

சங்கிட் டெரியக் குரங்கிள நீர்

02) பின்வரும் தொடரின் எழுவாய் பயனிலைகளைத் தருக.

தனிவிசும்பிற் தவழ்ந்திருவாய் வெண்ணிலாவே

03) ˙அதிபர் நாளை பாடசாலை விடுமுறை˙ என அறிவித்தார். இவ்வாக்கியத்தில்

அ. தலைமைத் தொடர்

ஆ. சார்புத் தொடர்

என்பவற்றைக் குறிப்பிடுக.

04) ˙அவள் என்ரை அண்ணற்றைமோள் ˙ திருந்திய வடிவில் தருக.

05) மறை எனும் சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

06) பின்வருவனவற்றுள் கருத்தில் வேறுபடும் தொடர் யாது?

திருப்பம், திசைமாறியது, உள்ளம் உருமாறியது, திக்குமுக்காடியது.

07) உறவு முறைக் கடிதத்தில் பின்வருவனவற்றுள் தவிர்க்கப்பட வேண்டியதைத் தெரிவு செய்க.

விளிப்பு, தலைப்பு, திகதி, விடயம், முடிவுரை, பெறுபவரின் முகவரி.

08) உயர்ந்தவரை பார்த்தீர்களா? என்பதன் இருவேறுபட்ட கருத்துக்களையும் தருக.

09) ˙கடல் நீரும் நீலவானும் கைகோர்க்கும் அதற்கிதற்கும் இடையில் கிடக்கும் வெள்ளம் எழில் வீணை˙ இதில் வந்துள்ள அணி யாது? விளக்குக.

10) ஔவை முதாட்டி அவசரமாக வந்துக்கொண்டிருக்கிறார். அவர் கோபத்தோடு இருப்பது தெரிகிறது. மேற்படி தனிவாக்கியங்களைக் கூட்டுவாக்கியமாக்குக.

11) 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக. விடயத்துக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

மக்களிடம் போதைப்பொருட் பாவனை அதிகரித்துவருகிறது. மாணவர்கள், வயது வந்தோர் போதைப் பழக்கத்திற்கு அடிமையாவதால் கல்விநிலை வீழ்ச்சியடைகிறது. சமூக விரோத செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைகிறது. போதைப்பொருட் பாவனையின் தீங்குகளை விளக்கி இப்பழக்கத்திலிருந்து விடுபட உமது ஆலோசனைகளை முன்வைத்து விளக்கக்கட்டுரை எழுதுக.

12) குப்பைகளை அகற்றல்˙ இலங்கையில் இன்று பாரிய பிரச்சனையாக உள்ளது. இதனை தடுக்க அரசாங்கம் பல முயற்சிகளை எடுக்கும் அதேவேளை பல சவால்களையும் எதிர்நோக்குகின்றது. இதனை ஆதாரமாகக் கொண்டு கழிவகற்றல் தொடர்பான உமது ஆலோசனைகள் உள்ளடங்கும் வகையில் பத்திரிகைக் கடிதம் ஒன்று எழுதுக.

## பகுதி 111

சுருக்கமான விடை தருக.

1) ஓடு மீன் ஓட உறுமீன் வருமாவும் வாடியிருக்குமாம் கொக்கு.

அ. உறுமீன் என்பது யாது?

ஆ. இங்கு கொக்கு யாருக்கு உவமிக்கப்பட்டுள்ளது?

2) ஆடிக்குடத்தடையுமாடும்போதே இரையும் மூடித்திறக்கின் முகங்காட்டும்……………….

அ. இப்பாடலில் ஒற்றிற்கொன்று ஒப்பிடப்பட்டுள்ளவை எவை?

ஆ. இச்செய்யுளில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

3) அவனுடைய முதல் கேள்வி உங்களுக்கு எப்படியான தூண்டில் வேண்டும்?

அ. இக்கூற்று யாரால்? யாருக்கு? கூறப்பட்டது?

ஆ. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

4)˙ அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு மன்னர்க ளிருக்க நிழலாகுமே˙

அ. புரவி என்பதன் பொருள் யாது?

ஆ. இப்பாடல் இடம்பெறும் இலக்கியம் எது?

5) கற்றார் முன் கல்வி உரைதத்தல் மிக இனிதே மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே

அ. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?

ஆ.˙மிக்கார்˙ என்ற பதம் யாரைக் குறிக்கிறது?

6) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார் ........... எனத் தொடங்கும் பாடல்

அ. எவ்வாறான நட்பை வெறுக்கிறது?

ஆ. காரணம் யாது?

7)˙விலகுபிள்ளை˙ என்று வழக்கமாகச் சொல்லுவதைச் சொல்ல முன்னரே விசுவநாதப்பிள்ளை மேடையில் விலகி இடம் கொடுத்தார்.

அ. இக்கட்டுரைப் பகுதி இடம்பெற்ற நூல் எது?

ஆ.˙விலகுபிள்ளை˙ என்று கூறியது யார்?

8) தப்பிய கந்தைபீ தாம்பரம்போல்

அ. தப்பிய எனப்பதன் பொருள் யாது?

ஆ. பீதாம்பரம் என்பதன் பொருள் யாது?

9) கம்பியூட்டரை எழுப்பினேன். நல்ல பாம்பை உசுப்பிவிடுவது போல ஸ்......ஸ் என்று அது உயிர்த்தது.

அ. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?

ஆ. இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது?

10) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார் கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்.

அ. ஒரிஇ என்பதன் பொருள் யாது?

ஆ. கேண்மை என்பதன் பொருள் யாது?